2017 ஜூன் 21]

இருக்கிற 24 சங்கங்களும் 100 சதவிகிதம் இலாபத்தில் இயங்குகிற சங்கங்களாக திருவண்ணாமலையில் இயங்கி வருகின்றன என்பது ஒரு மகிழ்ச்சியான செய்தி. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை ஏற்கப்படும், ஏற்கப்படும் என்று இரண்டு முறையும் தெரிவித்துவிட்டேன். மூன்றாவது முறையும் கோரிக்கை வைத்திருக்கின்றார். இப்போதும் அந்தக் கோரிக்கை ஏற்கப்படும் என்பதைத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 56, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

56—

வேளாண்மைக் கல்லூரி

***4251—திருமதி மு. சந்திரபிரபா:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி துவக்க கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா அவர்கள்.*

திருமதி மு. சந்திரபிரபா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இருந்தாலும், மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும்; இவர்போல யார் என்று ஊர் சொல்ல வேண்டும்" என்ற உயர்ந்த எண்ணத்தோடும், (மேசையைத் தட்டும் ஒலி) உயர்ந்த*

சிந்தனையோடும் வாழ்ந்தவர்கள் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களும். 'மக்களால் நான்; மக்களுக்காகவே நான்' என்று தவ வாழ்வு வாழ்ந்து, "மக்கள் நலனே, தன் நலன்" என்று தமிழக மக்களின் வளர்ச்சிக்காக எண்ணற்ற நலத் திட்டங்களை வழங்கி, இந்த மண்ணைவிட்டு மறைந்தாலும், மக்கள் மனதைவிட்டு நீங்காமல் வங்கக் கடலோரம் துயில் கொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா என்னும் தெய்வத்தை முதற்கண் வணங்குகின்றேன். மாண்புமிகு அம்மா அவர்கள் விட்டுச்சென்ற மக்கள் நலப் பணிகளையும், நலத் திட்டங்களையும் தொடர்ந்து மக்களுக்குச் செயல்படுத்தி நல்லாட்சி புரிந்துவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகின்றேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டம் விவசாயம் நிறைந்த மாவட்டமாகும். குறிப்பாக, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, விவசாயத்தை மட்டுமே தொழிலாகச் செய்யும் மக்கள் நிறைந்த பகுதியாகும். வேளாண்மைக் கல்லூரிக்குச் சென்று படிக்க வேண்டுமென்றால், மதுரை அல்லது திருநெல்வேலிக்குத்தான் செல்ல வேண்டியுள்ளது. எனவே, மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான ஒரு வேளாண்மைக் கல்லூரியை அமைத்து உதவிடுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக ஒரு வேளாண்மைக் கல்லூரியைத் தொடங்க வேண்டுமென்றால், குறைந்தது 50 கோடி ரூபாய் நிதியும், 110 ஏக்கர் விவசாய நிலமும் ஒரு பட்டப் படிப்பிற்குத் தேவைப்படுகிறது. அதிகப்படியான ஒவ்வொரு பட்டப் படிப்பிற்கும் கூடுதலாக 50 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. மேலும், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதிக்கு அருகில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் உறுப்புக் கல்லூரிகளான வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் மதுரை, தூத்துக்குடி

மாவட்டம், கிள்ளிகுளம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. மேலும், பல தனியார் இணைப்புக் கல்லூரிகளும், ஸ்ரீவில்லிபுத்தூருக்கு மிக அருகிலுள்ள வாசுதேவநல்லூரில் எஸ்.தங்கப்பழம் என்ற வேளாண்மைக் கல்லூரியும் மற்றும் தனியார் கல்லூரி ஒன்றும் அங்கே இயங்கி வருகின்றன. ஆகவே, அருகில் இருக்கின்ற அந்தக் கல்லூரிகளை அவர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா அவர்கள்.

திருமதி மு. சந்திரபிரபா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு என்றைக்கும் விவசாய மக்களின்மீது அக்கறை கொண்டுள்ள அரசு. ஆகவே, கல்லூரி மாணவர்கள் படிப்பதற்கு ஏதுவாக, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் ஒரு வேளாண்மை தொழில்நுட்பக் கல்லூரி அல்லது தோட்டக்கலைக் கல்லூரியையாவது அமைத்து உதவிடுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2014–2015 ஆம் ஆண்டில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் புதியதாக 3 வேளாண்மைக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. விவசாயத்திற்கு மட்டுமல்ல; கல்வியையும், விவசாயத்தையும் தன்னுடைய இரு கண்களாகப் பாதுகாத்து, இன்றைக்குத் தமிழகத்தையே வாழ வைத்துக்கொண்டிருப்பவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் மிக்க பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான், ஒரே ஆண்டில் 3 அரசு வேளாண்மைக் கல்லூரிகள் நிறுவப்பட்டன. மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் தஞ்சை மாவட்டம், ஈச்சங்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான்மலை மற்றும் திருவண்ணாமலை மாவட்டம், வாழவச்சனூரில் 3 வேளாண்மைக் கல்லூரிகளை நிறுவினார்கள்.

அதேபோல, உறுப்புக் கல்லூரிகளுக்கும் அனுமதி வழங்கப்பட்டு, அவை இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, தேவையான அளவிற்கு இன்றைக்கு வேளாண்மைக் கல்லூரிகள் தமிழகத்தில் செயல்பட்டு வருகின்றன. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் நல்லாட்சி புரிந்துவரும் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களின் கனிவாக பார்வைக்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும். அவசியமிருப்பின், வாய்ப்பிருந்தால், உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் செய்து கொடுப்பார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 57, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மருதமுத்து, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

57—

வருவாய் வட்டம்

***7283—திரு. அ. மருதமுத்து:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெங்கவல்லி தொகுதி, தலைவாசல் ஊராட்சி ஒன்றியம், தலைவாசல் கிராமத்தை தலைமையிடமாகக் கொண்டு வருவாய் வட்டம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9–6–2003–ல் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களான பரப்பளவு, மக்கள்தொகை மற்றும் வருவாய்க் கிராமங்களின் எண்ணிக்கை பூர்த்தியாகாததால், தலைவாசல் கிராமத்தை மையமாகக் கொண்டு, புதிய வருவாய் வட்டம் உருவாக்க சாத்தியகூறுகள் இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.